விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 10 ஜ. ஆதி 12 இதழ் 12
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 22-2-1986

UNIVERSITY OF ... RECEIVED ... 1986 PERIODICALS DIVISION LIBRARY

## ஜனாதிபதியை டிக்ஸிற் சந்தித்தார்

(பி. ராஜரட்ணம்)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை இந்திய உயர் ஸ்தானிகர் திரு ஜே. என். டிக்ஸிற் நேற்று சந்தித்து யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை நடந்த விமானக் குண்டு வீச்சு சம்பவம் பற்றி விரிவாக உரையாடினார்.

அல்லை-கந்தளாய் வீதியில் நிகழ்ந்த கண்ணி வெடிச்சம்பவம் அக்கரைப்பற்றுக்கு அருகில் தமிழர் படுகொலை செய்யப்பட்டது குறித்தும் ஜனாதிபதியுடன் திரு டிக்ஸிற் உரையாடினார்.

## பதுளை பஸ் விபத்து: 15 பேர் பலி! 45 பேர் காயம்!

[பதுளை]

பதுளைக்கருகில் இ. போ. ச. பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் 15 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள். 45பேர் பலத்த காயங்களுக்குள்ளாகி பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இவர்களில் 18 பேர் பெண்கள், 8 பேர் சிறுவர்களுமடங்குவர்.

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான உதவி நிறுத்தம்

# சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் நாளைமறுதினம் அறிவிக்கும்

(ஜெனீவா)

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதனால் அந்நாட்டுகான சகல உதவிகளையும் நிறுத்திக் கொள்ளுமாறு சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் உலக நாடுகளைக்கேட்டுக் கொள்ளவிருக்கிறது.

இது சம்பந்தமான தீர்மானத்தை, சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் எடுத்துள்ளது.

நோபல் பரிசு பெற்ற பிரபல ஆபிரிக்கரான பிஷப் டெஸ் மன்ட்டூட்டுவைத் தலைவராகக் கொண்ட இந்த ஸ்தாபனம், நாளைமறுதினம் திங்கட் கிழமை இம்முடிவை உத்தியோகபூர்வமுறையில்ஜெனீவாவில் அறிவிக்கும்.

## ● அக்கரைப்பற்று வயல்வெளியில்

# பலியானவர்கள் தொகை 103 ஆக அதிகரித்தது!

(ஏ, வி. மாணிக்கம்)

**அக்கரைப்பற்றுப் பகுதியிலுள்ள உடும்பன்குளம் வயல் பகுதியில் நெல் அறுவடை செய்வதில் ஈடுபட்டிருந்த தமிழர்கள் மீதான படுகொலைச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை நூற்று மூன்றாக அதிகரித்துள்ளதாக அஞ்சப்படுகிறது.**

இப்பயங்கரச் சம்பவம் கடந்த 19-ம் திகதி இடம்பெற்றது தெரிந்ததே.

நெல் அறுவடை செய்வதில் ஈடுபட்டிருந்தவர்கள் விவசாயிகளும், ஏழைத் தொழிலாளர்கள் என்றும், இவர்களுள் ஏழுவயது தொட்டு க்கம் வயது சென்றவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து 12 மைல் தூரத்திலுள்ள அக்கரைப்பற்றுக் கிராமத்தில் உடும்பன்குளம் வயல் வெளி உள்ளது இப்பொழுது நெல் அறுவடை செய்யும் காலம்.

சிறுவர், சிறுமிகள், இளம் பெண்கள், ஆண்கள், பெண்கள் ஆகியோர் அறுவடை செய்து போர் குவித்தவண்ணமிருந்தனர். கடந்த புதன் கிழமை காலை ஆயுதம் தரித்தவர்கள் இக்கூட்டத்தினரை சுற்றி வளைத்து துப்பாக்கிக

[5ம் பக்கம் பார்க்க]

## பலாலி கலாசாலை கோப்பாய் வருகிறது

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மார்ச் மாதம் மூன்றாம் திகதியிலிருந்து கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு இடம் மாற்ற யாழ் கல்விப் பணிப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

பலாலிப் பிரதேசத்தில் நடைபெறும் ஹெலிகொப்டர் மற்றும் விமானத் தாக்குதல் களினால் தமது சுற்றாடலில் மரண அபாயம் அதிகரித்து வருவதையும், பல சேதங்கள் இடம்பெற்று வருவதையும்

[5-ம் பக்கம் பார்க்க]

## திருமலையில் விமானங்கள் குண்டுவீச்சு! திரியாய் மக்கள் குடிபெயர்வு!

[திருகோணமலை]

திருமலை மாவட்டத்திலுள்ள திரியாய் என்னும் கிராமத்தில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகள் மீது 3 விமானங்களும், ஹெலிகொப்டரும், ஷெல் விமானமும் குண்டுகள் வீசி தாக்குதலை நடாத்தியுள்ளன.

நேற்று முன்தினம் வியாழக் கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது அன்றுகாலை மூன்று கவசவண்டிகள் சகிதம் அப்பகுதிக்கு நடந்து சென்ற இராணுவத்தினர் துப்பாக்கிகளால் சுட்டுக்கொண்டு சென்றனர்.

காலை தொடக்கம் பிற்பகல் வரை விமானங்கள் குண்டு வீசிக் கொண்டிருந்தன. ஏற்கனவே பீதியடைந்த மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி புடவைக்கட்டு மாதிரி கிராமத்தில் வந்து குடிபுகுந்தனர்.

குண்டு வீசினால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. (மா]

## "மாவட்ட சபையா, பிரதேச சபையா? எது வேண்டும்?" பிரதமர் கேட்கிறார்

(கொழும்பு)

''வடக்கிலும் கிழக்கிலும் ஆட்சி அதிகார சபைகள் நிறுவப்படவேண்டும் எனக் கோருபவர்களிடமிருந்து பிரதேச சபைகளா? அல்லது மாவட்ட சபைகளையா? அவர்கள் விரும்புகிறார்கள் என்று அறிந்து கொள்ளப்படும்'' என நேற்று பாராளுமன்றத்தில்உரையாற்றுகையில் பிரதமர் திரு. ஆர் பிரேமதாசா கூறினார். அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது;

''அபிவிருத்திச் சபைகளின் தேர்தல் சட்கு முன்பாக உத்தேச பிரதேச சபையின் தேர்தல்கள் நடத்தப்படும். சகல உதவி அரசாங்க பிரிவுகளிலும் பிரதேச சபைகள் நிறுவப் படும் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் இச்சபைகளின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் ஒவ்வொரு பிரதேச சபையும்

[5ம் பக்கம் பார்க்க]

## "புதிய மாணவர் துன்புறுத்தல் பற்றி முறையீடுவந்தால் விசாரித்து உரிய நடவடிக்கை!" துணைவேந்தர் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ். பல்கலைக்கழகத்திற்கு வருகைதரும் புதிய மாணவர்கள் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் முறையீடு செய்யப்படும் பட்சத்தில் அவ்விடயம் குறித்து விசாரணை செய்யப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டும்'' என்று யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

''யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் புதிதாகவரும் மாணவர்கள் துன்புறுத்த

(5-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டுக்கு பெண் பலி!

(ஒட்டுசுட்டான்)

கடை ஒன்றுக்குள் இருந்த பெண் ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்!

ஒட்டுசுட்டானைச் சேர்ந்த பூபதி சங்கரப்பிள்ளை (50 வயது) என்பவரே பலியானவராவார். (மா)

சவூதி அரேபியா
பிரயாணம்

சவூதி அரேபியாவிற்கு
T. V. Cleaners ஆக
செல்வதற்கான பிரயாண ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

சனிக்கிழமை (22-2-86) இன்று மட்டும்
சந்திக்கவும். சனிக்கிழமைக்குப் பின்னர் சந்திக்கமுடியாது.

விபரங்களுக்கு கீழ்காணும் முகவரியில் சந்திக்கவும்.

திரு. K. கந்தசாமி
7ம் கட்டை, சங்கானை.

LL. No: 414
A/414/1/85
(C-900)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் குறைந்த விலையில் வீடியோடெக், தமிழ், ஆங்கில வீடியோ கசட்ஸ், ரேடியோவுடன் சேர்ந்த கசட் பிளேயர் (Akai, கூடுதலான நிறையுடன் மேசைத் தராசு, ஒரேமுறையில் 100 கோழிக் குஞ்சுகளைப் பெறக்கூடிய இங்குப்பேட்டர் விற்பனைக்குண்டு. எல்லா நாட்களிலும் பார்வையிடலாம். தொடர்பு: இல. 1, செட்டித்தெரு ஒழுங்கை. நல்லூர். [C 870]

உரும்பராய் சந்திக்கு அருகாமையில் வீட்டுடன் ஐந்து (5) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி விஜயரட்னம், "College view" [கல்லூரிக்கு முன்பாக], உரும்பராய். [C 868]

250 Love Birds விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கன்னுதிட்டி ரோட், யாழ்ப்பாணம். [C 883]

BROILERS இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர், [C 767]

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Dressing Table, சிங்கர் மெசின், காரியாலய மேசைகள், விருந்தைக் கதிரைகள், நேசறிக் கதிரைகள், கட்டில்கள். சாப்பாட்டு மேசைகள், Belling Cooker, Oven, வெளியூர் கிளாஸ்வகைகள், Pyrex கோப்பைகள், Hall செற்றி, Bath Tub, Show Case, Baby Cot, மற்றும் கிளாஸ் வகைகள், துணிகள், பெட்சீற் விற்பனைக்குண்டு. தொடர்பு; பத்மநாதன், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில். (C-864]

## மணப்பந்தல்

28 வயதுடைய இந்துமத A/L படித்த அழகிய மணமகளுக்கு தகுந்த ஒழுக்கமான அரசாங்க, வங்கி அல்லது தனியார் கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. சீதனம் ஓரளவு வழங்கப்படும். சாதகக் குறிப்புடனும் மற்றைய சகல விபரங்களுடனும் தொடர்புகொள்க: விளம்பர இல. C 869, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 869]

## தேவை

10 கிறும்ஸ் தொடக்கம் 10 கிலோகிறும்ஸ் அல்லது கூடுதலான நிறையுடைய மேசைத் தராசு தேவை. யாழ். சயினீஸ் ரெஸ்ரோரன்ற், 124, R. R. நல்லையா வீதி, யாழ்ப்பாணம். [C 825]

## வகுப்புகள்

க. பொ. த. [உயர்] 86-மாணவர்களுக்கு ஞாயிறுதோறும் காலை 10 - 12 கலை/வர்த்தக வினாவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Centre, Karaveddy. [C 593]

வயறிங், வெல்டிங், ரேடியோ and ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங், ரேடியோ and எலக்ரோனிக், Short Hand Typing புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன. கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது. Vispa Engineering 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 873

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதனமின்றி மரணமெய்திய பழைய விலாசம்: விமானநிலையம் வீதி, வவுனியா. மரணமெய்தியபோது புதுவளவு, கோப்பாயைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கந்தையா பாலசுப்பிரமணியம் என்பவரின் மரணச்சொத்து விடயமாக,

— மரணமெய்தியவர்.

வேலுப்பிள்ளை கந்தையா பாலசுப்பிரமணியம் கைம்பெண் விசாலாட்சி, புதுவளவு, கோப்பாய்.

— மனுதாரர்.

வழ. இல. ரி / 3944

எதிராக

1. பாலசுப்பிரமணியம் சண்முகராஜா,
2. பாலசுப்பிரமணியம் சிறீஸ்கந்தராஜா,
3. பாலசுப்பிரமணியம் மகள் ரஜனி,
4. பாலசுப்பிரமணியம் மகள் ரமணி,
5. பொன்னம்பலம்மண்டலசேகரம். எல்லோரும் புதுவளவு, கோப்பாய் (4ம் எதிர்வாதி பராயமடையாதவர் ஆகையால் 5ம்எதிர்வாதிமூலம் வெளிப்படுகிறார்)

— எதிர்வாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு பங்குனி மாதம் 7ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்றுதிக் கட்டளை ஏன் முற்றாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1986ம் ஆண்டு மாசி மாதம் 11ந் திகதி.

என்னால் வரையப்பட்டது.

த. சோமசுந்தரம்.
மனுதாரின் சட்டத்தரணி.

த. சோமசுந்தரம்,
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
93/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(C855

## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 10 (1986-2-22)
கிழமை- சனி
திதி-திரயோதசி மு. இ வரை
நட்சத்திரம்- பூசம் மு. இ வரை

மேடம்: நீண்டநாள் பிரச்சினையில் இன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்லபெயரைச் சம்பாதித்துக் கொள்ளுவீர்கள்.

இடபம்: துணிச்சலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றமுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும்.

மிதுனம்; பணவிடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். பொருளாதார வரவிற்கும் இடமுண்டு.

கடகர்: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக்கொடுக்கும் உடல் நலம் பாதுக்கப்படலாம். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

சிங்கம்: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழிற்றுறையில் வேலைகள் அதிகரிக்கும். உடல்நலமும் குன்றும்.

கன்னி: குடும்பத்தில்அமைதி நிலவும். வெளியூர நண்பரின்

(7-ம் பக்கம் பார்க்க)

## மின் தடை

யாழ். மாநகர சபை எல்லைக்குள்.

## இலங்கை மின்சார சபையின் முக்கிய அறிவித்தல்

1986.02-23 ந் திகதி ஞாயிற்றுக் கிழமை முக்கிய திருத்த வேலைகள் காரணமாக காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்திருக்கும் பின்வரும் உப மின் நிலையங்களுக்கு மின் விநியோகத் தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

**உப மின் நிலையங்கள்**

1. குருநகர்,
2. கொன்வென்ற்,
3. சீ-நோர்,
4. குருநகர் குடியேற்றத் திட்டம்,
5. பாஷையூர்,
6. மனோகரா.

இம் மின்தடையால் பாதிப்புறும் சகல மின் நுகர்வோரிடமிருந்து அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

(A - 265)

## முதற்சம்பத்து முற்றான கட்டளையின் அறிவித்தல்

சாவகச்சேரி
மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி நல்லதம்பி சிவபூஷணம் என்பவரின் கூட்டு மரண சாதனம் சம்பந்தமாகக் குடியியல் நடைமுறைச் சட்டம் 525ம்பிரிவிற்கமைவாக செய்யப்படும் விண்ணப்பம்.

— மரணமெய்தியவர்.

வழக்குஇலக்கம்: 241/தத்துவம்

அத்துடன்

மாப்பாணர் நல்லதம்பி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

— மனுதார்.

மேற் பேரிட்ட காலஞ்சென்ற நல்லதம்பி சிவபூஷணம் ஆகியவரின் கூட்டு மரண சாதனத்தின் நிருபணத்திற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்க வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் முதற் சந்தர்ப்பத்து முற்றான கட்டளை 1986ம் ஆண்டு மாசி மாதம் 17ந் திகதி பிறப்பிக்கப்பட்டுள்ளதென்றும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1986ம் ஆண்டு மாசி மாதம் 20ந் திகதியாகிய இன்று நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

தயாரித்தவர்:

எஸ்.கே.திரவியநாயகம்
மனுதாரின் சட்டத்தரணி.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
நா. நாகேஸ்வரன்
(முருகண்டி)



அன்னை மடியில்:
28-01-1965
ஆண்டவன் அணைப்பில்:
05-03-1985
திதி:
22-02-1986

எங்கள் குடும்பத்தின் அன்புத் தீபமே! ஒளி விளக்காயும் வழிகாட்டியாகவும் திகழ்ந்து எங்களை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட தெய்வமே! விண்ணுலகம் நீ சென்று ஓராண்டு ஆனாலென்ன மண்ணைவிட்டு நாம் வரும்போதும் மாறாது உன்நினைவு. பூமாலை சூட்டி உன்புகழ்பாட ஆசைகொண்டோம். பாமாலை சூட்டி உனக்கு அளிக்கின்றோம்! உங்கள் ஆத்மசாந்திக்குப்பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரால் வாடும்:

ஐயா, அம்மா,
அண்ணமார்,
அக்காமார், தம்பிமார்,
பேத்தி, மச்சான்மார்,
மச்சாள்மார்,
மாமா குடும்பத்தினர்,
சிறியதாய்குடும்பத்தினர்
பெருமக்கள்,
மருமக்கள் மற்றும்
உறவினர்கள்,
நண்பர்கள்.

கோட்டைக்காடு,
மல்லாகம்.

C 845

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்
கனகலிங்கம்
லிங்கதேவன்



மலர்வு: 30-07-1967
உதிர்வு: 22-02-1984
திதி: 01-03-1986

எங்கள் இதயங்களில் இனிமைதர வந்தவனே! விளையாட்டே வினையாக உயிரை நீரினிலே அழித்தவனே! உன் ஆத்மா சாந்திக்காக வேண்டி நிற்கின்றோம்.

உனது பிரிவால் வாடும்:

அப்பா, அம்மா,
பெரியப்பா, பெரியம்மா,
சித்தப்பா, சித்தி,
அக்காமார்,
அண்ணன் ரஞ்ஜன்,
அண்ணி தற்சி,
மற்றும் சகோதரர்கள்,
நேசன், சுரேஸ்,
உதயன், றமேஸ்.

பொன்னப்பா ஒழுங்கை,
யாழ்ப்பாணம். A 274

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## உருக்கமான வேண்டுகோள்

குருநகர் கடற்கரை வீதியில் வைத்து CD 125, 86 Sri 9947 இலக்கமுடைய கறுப்பு நிறமுடைய(ஹொண்டா) மோட்டார் சைக்கிளை 16-2-86 இரவு எட்டு மணியளவில் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டது. இதில் புனித இயக்கங்கள் தலையிட்டு மீட்டுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இப்படிக்கு
K நாகேந்திரன்,
203 புங்கன்குளம் வீதி,
அரியாலை.

(C 94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானிய விமானம் சுடப்பட்டது

# அரசியல்வாதிகள் உட்பட 40 பேர் பலி!

## வானில் நடந்த பயங்கரம்

(தெஹ்ரான்)

**ஈரானிய பயணிகள் விமானமொன்றை ஈராக்கிய போர்விமானங்கள் சுட்டதில் அதில் பயணம்செய்த 8 பாராளுமன்ற அங்கத்தவர்கள் உட்பட சுமார் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.**

ஈரானிய விமானப் பிராந்தியத்தினுள் தெஹ்ரானிலிருந்து ஆபாஸ் நகரை நோக்கிச் சென்ற இந்தப் பயணிகள் விமானத்தை ஈராக்கியபோர் விமானங்கள் சுட்டுவீழ்த்தியதாக ஈரான் அறிவித்துள்ளது. இதில் பயணம் செய்தவர்களில் எட்டு பாராளுமன்ற அங்கத்தவர்கள், ஈரான் பத்திரிகை நிறுவனமொன்றின் அதிபர், ஈரானிய புரட்சித் தலைவர் இமாம் ஆயத்தொல்லா கொமெய்னியின் பிரதிநிதிகள் ஆகியோரும் அடங்கியிருந்தனர். இதுபற்றி ஐ நா. சபைக்கும் சர்வதேச விமானப் பணியகத்துக்கும் ஈரான்முறையிட்டுள்ளது.

இதே வேளை ஈராக் இதனை மறுத்துள்ளது. ஈரானின் மேலாக சென்ற இராணுவ போக்குவரத்து விமானமொன்றையே தனது போர் விமானங்கள் சுட்டுவீழ்த்தியதாக ஈராக் அறிவித்துள்ளது.

விமானப்படை ரீதியில் தனக்குள்ள மேலாண்மையைக் காட்டுவதற்காக ஈராக் மேற்கொண்ட இத்தாக்குதல் ஏற்கனவே உக்கிரமடைந்துள்ள வளைகுடாப்போரை மேலும் உக்கிரமடையச் செய்யலாம் என அரசியல் அவதானிகள் அஞ்சுகின்றனர். ஈரானிய நகரங்களின்மீதும் ஈராக்கிய விமானப்படை குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே ஈராக்கின் சல்ஃபா துறைமுகப்பகுதியில் போர் உக்கிரகமாக நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதே வாரத்தில் ஈரானினால் கைப்பற்றப்பட்ட இந்தப் பிரதேசத்தை மீட்டெடுக்கஈராக்முழுனைத் தாக்குதலொன்றை மேற்கொண்டுள்ளதாயினும் இதுவரை தனது நோக்கத்தை அடையவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## சலஞ்சர் விபத்து: பொறுப்பதிகாரிக்கு கல்தா!

[வாஷிங்டன்]

அமெரிக்க 'நாஸா' விண்வெளி ஸ்தாபனத்தின் மிக முக்கியஸ்தர்களிலொருவரான ஜெஸி மூர் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

'சலஞ்சர்' விபத்துப்பற்றி விசாரிக்க ஜனதிபதி றீகனல் நியமிக்கப்பட்ட விசேட ஜனதிபதி ஆணைக்குழு இந்தக் கலத்தின் பயணம் சம்பந்தமான விபரங்களை ஆராய்ந்த பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்படடுள்ளது.

மூர் 'சலஞ்சர்' கலத்தின் பயணத்துக்கு பொறுப்பாக இருந்தவர் அவரே அதன் பயணத்துக்கு இறுதி உத்தரவை வழங்கியவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சலஞ்சரின் இந்த இறுதிப் பயணம் ஆரம்பிக்க சிறிது நேரத்துக்கு முன்னர் இதைத் தொடருவதா அல்லது ஒத்திப் போடுவதா என விவாதம் நடந்ததாகவும், விபத்துக்குக் காரணம்எனக் கூறப்படும் கலத்தின் உந்து றெக்கட்டுக்களைத் தயாரித்த கம்பனியினர் பயணத்தைப் பின்போடுமாறும் வற்புறுத்தியதாகவும் அறியப்படுகிறது. [செ)

## கிறெனடாப் படையெடுப்பை நியாயப்படுத்துகிறுர் றீகன்

[லண்டன்]

கிறெனடாத் தீவின் மீதான அமெரிக்க படையெடுப்பையிட்டு தான் ஒருநாளும் வருத்தப்படப் போவதில்லை என்று அமெரிக்க ஜனதிபதி றீகன் கூறியுள்ளார்.

கிறெனடாத்தீவுக்கு ஒரு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு சென்ற அவர் கிறெனட மக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனைக் கூறினுர்

கரீபியத்தீவான கிறெனடா மீது அமெரிக்கா 1985-ம் ஆண்டில் படையெடுத்து அதனைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது தெரிந்ததே!

அவர் அங்கு உரையாற்றுகையில்: கிறெனடாவில் முன்னர் ஆட்சிசெய்த மார்க்ஸிஸ அரசாங்கத்தின் கொள்கைகளினுல் அந்நாட்டு மக்கள் மிகவும் கஷ்டங்களை அனுபவித்ததாகவும் அதனுல் ஆட்சிக்கெதிரான கலகங்கள் வெடித்ததும் மக்களைக் காப்பாற்ற படையெடுப்பை நடத்த அவசியமேற்பட்டதென்றும் கூறினுர்.

### உலகச் செய்திகள்

நிக்கரகுவா, கியூபா மார்க்ஸிஸ அரசுகளைக் கண்டித்துப் பேசிய அவர் எக்காரணம் கொண்டும் நிக்கரகுவா மீது படையெடுப்பை அமெரிக்கா நடத்தாது என உறுதியளித்தார்.

பெருந்தொகையான மக்கள் அவரதுஉரையை பேரார்வத்துடன் கேட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [செ]

## யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளில் துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் 20ம் திகதிஅதிகாலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றைததொடர்ந்து, யாழ் மாவட்டத்தின் பல பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள் நண்பகலுக்கு முன்னதாகவே மூடப்பட்டன.

யாழ். கோட்டைக்கு அண்மையில் சக இயக்கமொன்றின் போராளியின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான தமது இயக்கத்தின் போராளியான 'அமீன்' என்பவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக துக்கம் அனுஷ்டிக்கும்படி 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' வேண்டுகோள் விடுத்திருந்தது.

சாவகச்சேரியிலும் பூரணமாக துக்கம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், அங்கு நடைபெற்ற மரணச் சடங்கிலும் பல்லாயிரக்கணக்கானேர் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## சோவியத் ராஜதந்திரி அமெரிக்காவில் தஞ்சம்!

(வாஷிங்டன்)

கிறீஸிலுள்ள சோவியத் தூதரகத்தின் ராஜதந்திரி ஒருவர் அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார். இத்தகவலை அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் நேற்று முன்தினம் ஊர்ஜிதம் செய்தது. விக்டர் கொடாரியவ் என்பவரே இந்த ராஜதந்திரியாவார். காதல் விவகாரம் ஒன்றில் இவர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளாராம்.

50 வயதுடைய விக்டர் அதென்ஸிலுள்ள தமது தூதரகத்தில் இருந்து கடந்த வாரம் காணுமல் போனுர். அதன்பின்னர் அவர் இவ்வாரம் தமது 8 வயதுடைய மகனுடனும், இன்னெரு சோவியத் 'நண்பி'யுடனும் அமெரிக்காவில் தோன்றினுர் இவருடன் வந்த 'நண்பி' 30 வயதுடைய ஆசிரியையான கலினு கொமோவா ஆவார். இவர் கிறீஸிலுள்ள சோவியத் ராஜதந்திரப் பாடசாலையில் கடமையாற்றியவர்

கிறீஸிலுள்ள சோவியத் தூதரகத்தில் ஒரு ராஜதந்திரியாக பணிபுரிம் விக்டர் உண்மையில் சோவியத் ராணுவ உளவு ஸ்சாபனமான 'க்ரு' (Gru)வின் உளவாளியாவார் என அமெரிக்க ராஜாங்க திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயினும் அமெரிக்க அதிகாரிகள் இவருக்குத் தஞ்சமளிப்பதா இல்லையா எனககுழப்புகிறுர்கள் ஏனெனில் இதற்கு முன்னரும் இவ்வாறு ஒரு சோவியத் ராஜதந்திரிக்குப் புகலிடம் அளிக்கப்படடு பின்னர் அந்த ராஜதந்திரி தான் வலுக்கட்டாயமாகவே அமெரிக்காவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கூறி மீண்டும் சோவியத்துக்குத் திரும்பினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிற்சங்கக் கூட்டுக்குழு நடவடிக்கை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழுவினர் இம்மாதம் 27ம் திகதி நடத்தவிருந்த அடையாள வேலை நிறுத்தமும் ஆட்சேப கூட்டங்களும், பின் போடப்படலாம் எனத்தெரிய வருகிறது.

சகல அமைப்புக்களையும் சேர்த்து, மிகப்பெரிய அளவில், எதிர்ப்பை தெரிவிப்பதற்

[7-ம் பக்கம் பார்க்க]

## "நீதிச்சேவை ஆணைக்குழு கட்டளையை வாபஸ் பெறுக!"

### சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

"சட்டத்தரணிகள் தங்கள் சொந்த, சுகவீனம் காரணமாக நீதிமன்றம் வராவிட்டால்தான் வழக்குகளுக்கு தவணை போடவேண்டும் என்ற நீதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளையை வாபஸ் பெறவேண்டும்" என்று நேற்றுக்காலை நடந்த யாழ். சட்டத்தரணிகள் சங்க கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது,

யாழ். நீதிமன்ற நூலகத்தில் சங்கத் தலைவர் எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில், சட்டத்தரணிகள் சங்கக் கூட்டம் நடைபெற்றது இக் கூட்டத்தில் நிதிச்சேவை ஆணைக்குழுவின் கட்டளை பற்றி தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள், சொந்த, சுகவீனம் தவிர வேறு காரணங்களுக்காக நீதிமன்றம் வராவிடில் வழக்குகளை தவணை போடக்கூடாதென்று இக் கட்டளை மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது இக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இது அநீதியானதென்றும் சாத்தியமற்றதென்றும் நடைமுறைக்கு ஒத்துவராதென்றும், சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

தற்போதுள்ள நிலையில் சட்டத்தரணிகள், நீதிமன்றம் வரமுடியாத நிலையிலிருப்பதாகவும், போக்குவரத்து வசதிகள் இல்லையென்றும், மேலும் பல காரணங்களினுல் வரமுடியாத நிலையிலிருப்பதா

[7-ம் பக்கம் பார்க்க]

## இஸ்ரேல் படைகளை விலக்கவேண்டும்! ஐ. நா. செயலாளர் நாயகம் கோரிக்கை

(நியூயோர்க்)

தென் லெபனனிலுள்ள தனது படைகளை விலக்கிக் கொள்ளவேண்டுமென ஐ நா. சபையின் செயலாளர்நாயகம் பெரஸ் டி. குவெல்லியர் இஸ்ரேலைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை தென்லெபனனில் பாதுகாப்பு வலயத்தினுள் வைத்து கடத்தப்பட்ட இரு இஸ்ரேல் படைவீரர்களைத் தேடி இஸ்ரேல் படைகளே பெரும்தேடுதல் வேட்டையை நடத்தி வருவது தெரிந்ததே!

இவ்விருவீரர்களில் ஒருவரைத் தாம் கொன்று விட்டதாகவும் அவரின் சடலத்தை ஒப்படைக்க வேண்டுமானல் இஸ்ரேல் தனது படைகளை தென் லெபனனிலிருந்து வாபஸ்பெற வேண்டுமென இஸ்லாமியஎதிர்ப்பு முன்னணி நிபந்தனை விதித்திருந்தது. (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எவன் உன்னிடம் இன்னொருவனைப்பற்றி வம்பளக்கிருனே அவன் உன்னைப்பற்றி இன்னொருவனிடன் வம்பளப்பானென்பதை அறி.

—ஸ்பானிய பழமொழி.

# நமது நோக்கு

## கவலை போதாது; காரியம் ஆகட்டும்!

'கெடுகிறேன் பந்தயம்பிடி' என்ருெரு பெரும் பொறுப்புடைய தலைவர் நாட்டின் பாதுகாப்பு பற்றிய கொள்கையில் பிடிவாதம் கொண்டால் தில்லைச் சிதம்பரதேவனுக்கே நாம் முறையிடவேண்டும்.

இங்கு வாழும் தமிழ் மக்கள் நாளுக்குநாள் இலங்கை ராணுவத்தால் மண்ணிலும் விண்ணிலுமிருந்து சுட்டுத் தள்ளப்படுகின்றனர். உயிருடன் பெண்கள், குழந்தைகள் எரிக்கப்படும் காட்சியை நாம் நாகரிக நாடுகள் எதிலும் காணலாமா?

இதில் தயங்காமல் தொடருவோமென்ற அகங்காரம் எதனை உணர்த்துகிறது? அழிவுக்கு முன் அகந்தை என்றது உண்மையானுலும் அந்த அழிவு எங்கள் மக்களுக்குரிய உடனடி நிவாரணம் அளிக்காது.

'பிரிட்டன் மீது விமானப் போர்' 'Battle of Britain' ஒன்றை ஹிட்லர் ஆரம்பித்தமாதிரி யாழ்ப்பாணத்தின்மீது போர் என்ற விமானப்போர் ஆரம்பமாகிவிட்டது. எதிர்த்தாக்குதலுக்கு நாம் தயாரா?

இங்கு வாழும் அப்பாவி மக்கள் இவ்வித போருக்கு எவ்விதத்திலும் ஆயத்தமில்லை. நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல் இரண்டாவது உலகயுத்தத்தின் போது, ஜெர்மன் குண்டு வீச்சுக்கு யாழ்ப்பாணமே தன்னைப் பாதுகாக்கத் தயாராகவிருந்தது. இன்று எமது ஆட்சியென்று சொல்லிக் கொள்ளும் 'கொழும்பு ஆட்சி, எங்களைப் பாதுகாப்பதைவிட்டு எம்மை அழிக்கத் திட்டமிடுவது போல் தெரிகிறது?

'பயங்கரவாதிகளை' த் தேடி அழிப்பதில் இலங்கை இராணுவம் காட்டும் திறமை பாதுகாப்பற்ற ஏழை விவசாயிகள், மீனவர், பெண்கள், வயோதிபர், குழந்தைகள் போன்ற அப்பாவிகளிலேயே தொழிற்படுகின்றது. கண்ணிவெடிக்கு அளிக்கப்படும் விடை இதுவே.

அரசாங்கம் எங்களைக் காப்பாற்றும்என்ற கனவை நாம் ஒருபோதும் காணவில்லை. இன்று வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் உயிரோடு வாழமுடிகிறது யாராலென்ருல் அது வெள்ளிடை மலை.

இது இன்று பகிரங்க ரகசியமாகையால் மக்களைப் பணயம் வைத்து 'பாதுகாப்பு வலயம்', விமானப் போர் என்ற உத்திகளை, தோல்விக்குமேல் தோல்வி கண்ட ராணுவம் கையாளுகிறது. மேலிடம் உத்தரவிடுகின்றது. உலக வரலாற்றில் இது ஒரு புதிய அரிய சாதனை.

இதற்குப் பொதுமக்கள் ஆதரவளிப்பார்களா? எந்த மிதவாதி இன்றைய நிலையில் போராளிகளைக் காட்டிக் கொடுப்பான்? தற்கொலை செய்வது அதிலும் பார்க்க திறமல்லவா?

நாட்டுக்கெதிரான பயங்கரவாதமென்ருல் அதனை அழிக்க மக்களைத் திரட்டும் கட்டம் எப்பவோ மலையேறிவிட்டது.

மக்களைப் பிளவுபடுத்தி இயக்கங்களைப் பலவீனப்படுத்தி வெற்றி காணும் கனவு இன்று பலிக்காதென்பதை மக்கள் அறிவார்கள். அரசு அறியவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

தமிழ் மக்கள் ஒன்றுபட்டெழுப்பும் எதிர்ப்பு, அரசை அசைக்க முடியாமல் இருக்கலாம்; ஆனுல் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பொறுப்பை நாம் இங்கு குறிப்பிட்டு வற்புறுத்த வேண்டும்

இலங்கை அரசின் கொடுமைகளுக்கு இந்தியாவின் நீண்டகாலக் கவலை செல்லாக் காசோலைபோல் தெரிகிறது.


மறைந்த பிரதமர் இந்திரா ராஜீவின் அருமைத் தாயார் 1983-ல் கலவரத்தின்போது மேன்மை தங்கிய ஜனுதிபதிக்கு விடுத்த ''பணிவான கோரிக்கை'' இந்தக் கொலைகள் முடிவடைய வேண்டும் - These Killings must stop.

அத்துடன் நிற்காது தம்முடைய சிரேட்ட அமைச்சர் நரசிம்மராவ் அவர்களை நேரில் பார்வையிட அனுப்பி வைத்தார். அகதிகளுக்கு உணவு உடை மட்டுமல்ல யாழ்ப்பாணம் செல்ல 'சிதம்பரத்தை' யும் அனுப்பிவைத்தார். கலவரம் கலைந்தது.

இன்று தமிழ்மக்கள் கிழக்கிலும், வடக்கிலும் விமானப்போருக்குப் பலியாகின்றனர்; இதனை நிறுத்த தென்னகத்திலிருந்து தமிழ் தலைவர்கள் தொலைபேசியில் பரிகாரம் தேடுவது சன்னி முறிக்க கஷாயம் குடிப்பது போன்றது. அங்கு வதியும் தமிழ்தலைவர்களும் போராளிகள் தலைவர்களும் எடுக்கும் நடவடிக்கைகள் நாமறியாததல்ல, ஆனுல் இன்று உருவாகி இருக்கும் போர்முறை பொது மக்களுக்கெதிரான நேரடித்தாக்குதல் என்பது அவசர கவனிப்புக்குரியது.

இதனைத் தடுக்க இந்தியாவில் வதியும் சுமார் ஒன்றரை லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகள் ஒன்றுபட்ட குரல் எழுப்பவேண்டும். இக்குரல் இருபடைகளாக தமிழகச் சட்டமன்றத்திலும் டில்லி பாராளுமன்றத்திலும் ஒலிக்கவேண்டும்.

விண்ணளாவி நிற்கும் இமயமலையில் சோழநாட்டுப் புலிக்கொடியை ஏற்றியவன் கரிகாலசோழன். தமிழ்நாட்டாரின் வீரப் புகழை வடநாடு மறக்க மாட்டாது. எனவே இன்று எமக்குண்டான ஆபத்தை நீக்க - போர் தொடுப்பதற்கல்ல - இந்தியா ஆவன செய்யவேண்டும்.



அண்ணாந்து பார்க்காதீர்கள் !

# விமானக் குண்டுத் தாக்குதல்: தப்ப வழிகள்!

தமிழர் பிரதேசங்களான வட, கிழக்கில் விமான மூலம் குண்டுத்தாக்குதல் சாதாரணமாகி வருகின்றது.

இங்கு இதுவரை இடம் பெற்றவிமானத் தாக்குதல்களில் கடந்த19 ம் திகதிதாவடி, கோண்டாவில் பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதல் பயங்கரமானது.

கோண்டாவில், தாவடிப் பகுதிகள் யுத்தகாலத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் போல் கோரமாகக் காட்சியளிக்கின்றன.

கடந்த 19 ம் திகதி இப்பகுதிகளில் இடம்பெற்ற விமான குண்டுத்தாக்குதல்களில் இந்த இரு கிராமங்களும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 19 ம் திகதி பிற்பகல் 6 விமானங்கள் தாவடி, கோண்டாவில், இணுவில், உரும்பராய் முதலான பகுதிகளில் கூட்டாகக் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டன. இதனுல் பலர் மாண்டனர். வீடுகள் பல சேதமாயின.

யுத்தகாலத்தில் உபயோகிக்கப்படும் போர் விமானங்களே இத்தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

இதுபோன்ற விமானக்குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறும் காலத்தில் எப்படி மக்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று தெரிந்து கொள்வதற்காக முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தில், கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளைத்திரட்டி இங்கு தருகின்ருேம். இதன் முதல் பகுதி இன்று வெளியாகிறது. மீதி நாளை வெளிவரும்.

குண்டு வீச்சானது, பல்வேறு வகைப்பட்ட கருவிகளால் நடத்தப்படினும்,ஆகாய விமானங்களின்மூலம் போடப்படும் குண்டுகளே அளவில் பெரியவையாகவும், ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது கூடியளவு தாக்கத்தை அளிக்கக் கூடியனவாகவும் உள்ளன. எனவே இவற்றுக்கெதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளிலேயே கூடியளவு கவனம் செலுத்துதல்வேண்டும்.

ஆகாய விமானத் தாக்குதலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் யாவை? இக்கேள்விக்கான பதிலானது தரப்படுமுன்னர் உங்கள் மனதில் கற்பனை செய்துவைத்திருக்கும் விமானத் தாக்குதலைப் பற்றிய மோசமான, பாரதூரமான கற்பனைகளை அகற்றிவிடுங்கள். ஏனெனில் ஆகாய விமானமானது உங்கள் மன உறுதிக்கெதிரான ஆயுதமேயாகும். வெறுமனே பயங்கர சத்தத்தை எழுப்பிக்கொண்டு தாழ்வாகப்பறந்துவந்து தாக்குவது மக்களிடையே பீதியையும், குழப்பத்தையும் உண்டு பண்ண வேண்டும் என்ற ஒரேயொருநோக்கத்தினுலேயாகும் எதிர்பார்த்தபடி நீங்கள் சிதறி ஓடுவீர்களேயாயின்பெருமளவு பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டவர்களாவீர்கள். ஆனல் உறுதியான மனவலிமையுடன் எந்தவொரு தாக்குதலுக்கும் தாக்குப்பிடிக்கச் கூடிய ரீதியில் திட்டமிட்டு செயலாற்றுவீர்களேயாயின், குண்டுவீச்சுக்களினுல் பெருமளவு உயிர்ச்சேதம் எதனையும் ஏற்படுத்தமுடியாது.

விமானங்கள் குண்டு வீசும் போது கண்டபடி ஓடுவதுஎந்தவித பலனையும் அளிக்கப் போவதில்லை. எந்தவொரு குண்டு வீச்சின்போதும் நேரடியாக குண்டு விழும் இடத்தில் ஏற்படும்உயிரிழப்பை விடவும், குண்டுவெடிப்பின் போது உருவாக்கப்படும் சிதறு துண்டுகளே பெருமளவுஉயிர்ச்சேதங்களை எற்படுத்துகின்றன. விமானங்கள் குண்டு வீச வரும் போது ஒரு போதும் ஒரு கூட்டமாக நின்று மேலே அண்ணாந்துபார்க்காதீர்கள். இயலுமானவரை நன்கு தூரத் தூர விலகி உங்கள் முகங்களை விமானத்திற்கு காட்டாதவாறு இருங்கள். ஏனெனில் மனித முகமொன்ருனது மேலிருந்து பார்க்கும் பொழுது வேறெவற்றையும் விட இலகுவில் தெரியக் கூடியதாகும். உங்கள் முகங்கள் தெரியாவிடின் உங்களை விமான ஓட்டிகள் காணும் வாய்ப்பு குறைகின்றது. தற்செயலாய் கண்டு கொண்டாலும் உங்களை நேரடியாக தாக்கும் வண்ணம் குண்டு வீசுவது கடினமாகும். எனவே அவ்வாருன சந்தர்ப்பங்களில் நீங்கள் யாதாயினும் மறைப்புகளினுள் சென்றுவிடுவதே பாதுகாப்பானதாகும். குண்டு வீச்சொன்று நிகழும் போது வெவ்வேறு ஐந்து சந்தர்ப்பங்களை எடுத்து அவற்றுக்குரிய பாதுகாப்பு விதங்களை ஆராயும் போது அது பின்வருமாறு காணப்படுகிறது.

★ அகழியொன்றினுள் புகலிடம் தேடுவது,

★ கொங்கிறீற் கல்வீடு ஒன்றினுள் புகலிடம் தேடுவது,

★ தாழ் மறைப்புகளுக்குப்பின்னே படுப்பது,

★ திறந்த வீதியொன்றில் குப்புறப் படுப்பது,


★ திறந்த வீதியொன்றில் எழுந்து நிற்பது பாதுகாப்பை இடையாது.



கடந்த வியாழக்கிழமை தாவடியில் இடம் பெற்ற விமானக்குண்டு வீச்சின்போது ஏற்பட்டுள்ள 8 X 6 அடிக்கிடங்குகளையும், வெடித்த குண்டின் பாகங்களையும் இங்கு காணலாம்.

இதிலிருந்து அகழி அல்லது உறுதியான கட்டிடமொன்றினுள் பாதுகாப்புத்தேடுவதை உயிரிழப்பைக் குறைப்பதற்குரிய மிகச் சிறந்த வழிமுறையாகத் தெரிகின்றது. இருப்பினும் மக்களது அன்ருட வாழ்க்கையின் வேறுபட்ட பல சந்தர்ப்பங்களை எடுத்து நோக்கும் போது, பலவற்றில் உடனடியாக அகழியையோ அல்லது உறுதியான கட்டிடமொன்றையோ தேடி ஓடுவதென்பது சாத்தியமற்றது என்பதனுல், முதலில் அவ்வாருன சந்தர்ப்பங்களில் நீங்கள் செய்யவேண்டி செயல்முறைகள் பின்வருமாறு: ஒவ்வொரு செயல்முறைகளின் போதும் நீங்கள் நெருக்கமாக

(5-ம் பக்கம் பார்க்க)



சிதறி ஓடாதீர்கள் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடுமுழுவதும் இன்று பல் வைத்தியர் வெளிநடப்பு!

[யாழ்ப்பாணம்]

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் உள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் கடமைபுரியும் பல் வைத்தியர்கள், டாக்டர்களுக்கு விசேடபடியாகக் கொடுத்த ஆயிரம் ரூபாவை தமக்குத்தர சுகாதார அமைச்சு மறுப்புக் கூறியதனுல் நேற்று முன்தினம் கடமைகளைச் செய்யமறுத்து வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று யாழ்ப்பாணம்-மட்டக்களப்பு, காலி, மாத்தறை போன்ற பெரிய நகரங்களில் உள்ள மாகாண ஆஸ்பத்திரிகளில் கடமைபுரியும் பல் வைத்தியர்கள் தம் கடமைகளைச் செய்யாது வெளிநடப்புச் செய்தனராம். இன்று முழு இலங்கையிலுமுள்ள பல் வைத்தியர்கள் கடமைசெய்யாது வெளிநடப்புப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் எனத் தெரிகிறது.

இதேவேளை இதுசம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தை நேற்றுக் கொழும்பில் நடந்தபோதிலும் ஆயிரம்ரூபா வழங்குவது சம்பந்தமான முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிகிறது. [ஐ]

## விமானக்....

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

இராது தூரத் தூர விலகி இருக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும்.

### திறந்த வெளியில் அல்லது தெருவில் உள்ளபோது...

அருகில் பாதுகாப்புக்குரிய விசேட அமைப்புக்கள் எதுவும் இல்லாத இச்சந்தர்ப்பங்களில் அவற்றினை நோக்கி தொலை தூரங்களுக்கு ஓட முயற்சிக்க வேண்டாம். நீங்கள் செய்ய வேண்டியது அவ்விடத்திலேயே குப்புற விழுந்து படுப்பதேயாகும். தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம் பெறுமாயின், ஒரு தாக்குதலுக்கும், அடுத்த தாக்குதலுக்கும் இடைப்பட்ட நேரத்தில் அருகில் உள்ள பள்ளங்களினுள்ளோ அல்லது நீர் வடிந்து செல்வதற்குரிய வடிகால்களினுள்ளோ உருண்டு சென்று விடுங்கள். அது உங்களுக்கு கூடியளவு பாதுகாப்பு தரக்கூடியது.

(மிகுதி நாளை வரும்)

கடைசிநேர வரிவிளம்பரம்

**தேவை**

வொக்ஸ் வகன் 1200, 1300 தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். ராஜநாயகம் C/O சுலைமான்கண்டு அன்பிறதர்ஸ், 5-7, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (C- 899)

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
பாண்டியன் — விஜி
**கோயில் யானை**

**லிடோ சினிமா**
10-30, 2-30 4-45 6-30
James Bond 007
in
**Octo Pussy**
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஸ்
நடித்த
**ஆனந்த ராகம்**
(புதிய பிரதி கலர்)

**வின்சர்**
வெண்திரையில்
10. 30, 2. 00. 4 30, 7 00
**The Birth**
அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும். (A-890)

## இலக்கிய வட்டக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். இலக்கிய வட்டக் கருத்தரங்கு நல்லூர் இந்து விடுதியில் நாளை பிற்பகல் நடைபெறவிருக்கின்றது.

திரு. சசிபாரதி தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் இன்றைய இலக்கியம் பற்றி கவிஞர் இ முருகையன் உரையாற்றுவார்.

## மாசிமகத் திருவிழா

[யாழ்ப்பாணம்]

மாசி மகத் திருவிழா நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நாளை மறுநாள் திங்கட்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்று காலை தீர்த்தோற்சவமும் மாலை அங்கோத்திர சங்காபிஷேகமும் நடைபெறும். [ஐ]

## மீன் பிடிக்கச் சென்றவரைக் காணவில்லை

(பண்டத்தரிப்பு)

இரவுவேளையில் கடலில் தன்னந்தனியாக மீன் பிடிக்கச் சென்ற மாதகலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணமற்போய் விட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

மாதகல் துறைமுகத்தைச் சேர்ந்த ''அருமை'' என்றழைக்கப்படும் அந்தோனி முத்து சகாயராசா என்னும் 26 வயதுடைய இளைஞர் கடந்த திங்கட்கிழமை இரவு கட்டு மரம் ஒன்றில் மீன் பிடிக்கச் சென்றதாகவும், மூன்று நாட்களாகியும் இவர் திரும்பி வரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் சென்ற கட்டுமரம் மாதகல் கடற்பகுதியில் அரை மைல் தூரத்தில் மிதந்த நிலையில் கிடக்கக் காணப் பட்டதாம். இந்த இளைஞருக்கு நேர்ந்த கதி என்ன என்பது பற்றி தெரியவில்லை.

இவரைத் தேடி வள்ளங்களில் உறவினர்கள் கடலில் தேடுதல் நடாத்தி வருகின்றனர்.

## புதிய மாணவர் துன்புறுத்தல்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

படுவது பற்றி பலவாறு பல வெளியீடுகளும் அறிக்கைகளும், பத்திரிகைகளும், துண்டுப்பிரசுரங்களும், சுவரொட்டிகளும் வெளியாகியுள்ளன

''புதிய மாணவர்களைத் துன்புறுத்தினுல் தண்டனை விதிக்கப்படுமென புதிய மாணவர் வரும்முன்னரே எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது புதிய மாணவர்களை நிர்வாகம் வரவேற்கும்போதும் சிரேஷ்ட மாணவரோ, பிறரோ புதிய மாணவர்களைத் துன்புறுத்தினுல் நிர்வாக அதிகாரிகளுக்கோ, துணைவேந்தருக்கோ, துன்புறுத்தப்பட்டவர்கள் முறையீடு செய்தால் விசாரணையின் பின் துன்புறுத்தியவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என உறுதிகூறப்படுகிறது.

இதுவரையில் நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்ட முறையீடுகளில் ஒன்று மாணவி ஒருவரை, மாணவர் ஒருவர் துன்புறுத்தினுர் என்று விரிவுரையாளர் ஒருவர் அறிவித்து சம்பந்தப்பட்ட இருவரையும் நிர்வாகத்திடம் ஒப்படைத்ததாகும்.

''இதை விசாரித்தபொழுது மாணவி மாணவனுக்கு எதிராக எவ்விதமான பாரதூரமான குற்றத்தையும் சுமத்தாதபடியாலும், மாணவன் தான் இனிமேல் துன்புறுத்தலில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்து மன்னிப்பு கேட்டதனுலும் அவரை கடுமையாக எச்சரித்து மேல் நடவடிக்கை எடுக்கவில்லை.

''பாரதூரமாக துன்புறுத்தல் செய்யப்படவில்லையென்று எமக்கு எழுத்தில் தரப்பட்டுள்ளது. இது தவிர மாணவிகள் துன்புறுத்தப்படுவது பற்றியோ, வதை செய்யப்படுவது பற்றியோ நிர்வாகத்திடம் முறையீடு செய்யப்படவில்லை.

''இதுதவிர சில சிரேஷ்ட மாணவர்கள், சில மாணவர்களை (மாணவிகளை அல்ல)துன்புறுத்தியதாக முறையிடப்பட்டது துன்புறுத்தல் பற்றி விசாரணைசெய்வதற்கென நியமிக்கப்பட்ட குழு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் நிலையில் உள்ளது. அறிக்கையின்படி சிரேஷ்டமாணவர்கள் குற்றவாளிகள் எனக் காணப்பட்டால் உரியதண்டனை வழங்கப்படும்.

''துன்புறுத்தப்படுவோர் தனிப்பட்டமுறையில்சிரேஷ்ட மாணவ ஆலோசகரிடமோ, பீடாதிபதிகளிடமோ, துணைவேந்தரிடமோ முறையீடுசெய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இதனை மாணவப்பிரதிநிதிகளும் எதிர்க்கமாட்டார்கள் தனிப்பட்ட முறையில் மேலே கூறப்பட்டுள்ள முறையீடுகள் பகிரங்கப்படுத்தப்படமாட்டா

''சிரேஷ்ட மாணவர்களும், புதியமாணவர்களும், விரிவுரையாளர்களும் ஒத்துழைத்தாலே இத்தகைய துன்புறுத்தல்கள் தடை செய்யப்பட முடியும் இத்தகைய சமூகவிரோத செயல்களும் அகற்றப்படும்''

## பதுளை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுளைக்கருகில் துங்கிந்த வளைவில் ஏற்பட்ட இந்த விபத்தின்போது குறித்த பஸ் மகியங்கனை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததாம்,

'பிரேக்'பழுதானதால்இந்த விபத்து ஏற்பட்டதாகக்கூறப்படுகின்றது. கடைசி நேரத்தில் பஸ்ஸை வேறுபக்கமாகத் திருப்புவதற்கு சாரதி முயன்ற போதிலும் பெரும் பள்ளத்தாக்கில் பஸ் உருண்டு விழுந்ததாம். விபத்து நடந்த இடத்திலிருந்து 20 அடி தூரத்தில் பஸ்ஸின் கூரை கிடந்ததாகச் கூறப்படுகின்றது.

## மாவட்டசபையா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20 உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும் இச்சபைகளுக்கு அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சி அதிகாரங்கள் வழங்கப்படும். இவை நகரசபை, மாநகரசபையின் கடமைகளையும் புரியும்

அரசாங்க நிர்வாக அலுவல்களில் பாமரமக்களைப் பங்கு கொள்ளச் செய்வதற்கும் இளஞ்சந்ததியினர் அனுபவம் பெறவும் இவை உதவும். இந்தச்சபைகளை 'கிராமிய நாடாளுமன்றங்கள்' என்றும் கூறலாம்'' என்றும் பிரதமர் மலும் தமது உரையில் கூறினுர். நாட்டின் வடக்குப் பகுதியில் சுமார் 70 பிரதேசசபைகளை நிறுவமுடியும் என்றும் அவர் கூறினுர். (ச)

## பலியானவர்கள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளால் சுட்டனர்.

அன்று காலை 10 மணி தொடக்கம் பி. ப. 5 மணி வரை இந்தப் பயங்கரம் நடைபெற்றதாம்.

பெண்களில் பலர் மானபங்கப்படுத்தப்பட்டு பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், ஆண்களில் பலர் சிறு சிறு கூட்டங்களாகக் கைகள் கால்கள் கட்டப்பட்டும், நிறுத்திவைக்கப்பட்டும் கொல்லப்பட்டதாகவும், அக்கூட்டத்திலிருந்து தப்பிவந்த மூவர் பிரஜைகள் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

நெற்கதிர் போர்களுள்ளும் சூட்டுக்குவியல்களுக்குள்ளும் கருகிய நிலையில் சடலங்கள் கிடக்கின்றனவாம்.

நெற்கதிர்ப்போர்கள் இன்னமும் நெருப்பு புகைந்தவண்ணமிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது. இக்கொலையுண்ட விவசாயிகளுள் சில முஸ்லிம்களும் அடங்குவர்.

தப்பிவந்த மூவர் தெரிவித்த தகவலின் பேரில் மட்டக்களப்பு பிரஜைகள்குழு நேற்று சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு சென்றுபார்வையிட்டது.

இக்கிராமம் ஒரே சோகமயமாகக் காட்சியளிக்கிறது.

## விடுதலைப்புலிகள் அறிவிப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள உடும்பன்குளத்தில் இலங்கை இராணுவத்தினர் 96 தமிழ் அப்பாவிபொதுமக்களை கொலை செய்துள்ளனர் என்று தமிழ் ஈழவிடுதலைபுலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்த இயக்கம் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கையில் இதனைத்தெரிவித்துள்ளது.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகளும் இந்த கொல்லப்பட்டவர்கள் வரிசையில் அடங்குவார்கள் என்றும் அந்த அந்த அறிக்கை கூறுகிறது.

# ''யுத்தத்தில் எவருக்கும் வெற்றி கிடையாது; இனப் பிரச்னைக்கு உடனடித் தீர்வு தேவை''

மூன்று கட்சிகள் கூட்டறிக்கை

[கொழும்பு]

''நாங்கள் ஏற்கனவே வலியுறுத்தியபடி, தற்போது இனப்பிரச்னையை முகாந்திரமாகக் கொண்டு நடாத்தப்படுகின்ற யுத்தத்தில் எவருமே வெற்றி காணப்போவதில்லை எல்லோரும் தோல்வியடைவதால் முழு நாடுமே நாசமாகப் போகிறது''

லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியவை நாட்டின் தற்போதைய நிலவரம் குறித்து நேற்று வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன.

''சகிக்கமுடியாத இந்த நிலவரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்குவாறு அரசாங்கத்தையும், போராளிகளையும் தாம் கோருகிறோம். இங்கு ஒரு இனப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணப்படவேண்டிய அவசர அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை இரு தரப்புகளும் உணர்ந்துகொள்ளவேண்டும். நாட்டின் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டினையும் கௌரவிக்கின்ற அடிப்படையிலேயே இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்ற உண்மையையும் இவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தற்போதைய கொலைகளாலும் அழிவுகளாலும், சகிக்கமுடியாத பதற்றத்தாலும் உணர்ச்சிவசப்படுபவர்கள், ஒரு அரசியல்தீர்வின் மூலமே அனைத்து இனத்தவரும் அமைதியாக வாழமுடியும் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.'' என்று மேற்படி அறிக்கை கூறுகின்றது.

## பலாலி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டிக்காட்டி தமது பாதுகாப்பை உத்தரவாதப்படுத்துமாறு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்கள்விடுத்த வேண்டுகோளைத்தொடர்ந்தே யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் மேற்படி முடிவை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

## ஊறணியில் பதற்றம் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையை அடுத்துள்ள ஊறணிக் கிராமத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியானுர். மக்கள் பதற்றமடைந்து வீடு, வாசல்களை விட்டு ஓடினர்.

சூட்டுச் சத்தங்களால் பீதியடைந்த ஊறணிக் கிராமமக்கள் தமது வீடு வாசல்களை விட்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினர் அக்கிராமம் முழுவதும் பதற்றத்துக்குள்ளானது.

## முகமாலை சம்பவம் — சடலம் ஒப்படைப்பு

[கிளிநொச்சி]

முகமாலையில் இடம்பெற்ற ஆகாயத் தாக்குதலில் பலியான 60 வயது மதிக்கத்தக்க மாதுவின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த இந்த வயோதிபப்பெண், டீலை இணக்கசபைக்கு வழக்கொன்றின் நிமிர்த்தம் மினிவானில் செல்கையில் ஆகாயத்தில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலில் பலியானுர்.

இவரதுசடலம் அடையாளம் காணப்படாது சாவகச்சேரி ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்தது கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் எஸ்- முருகவேள் தாக்குதல் சம்பவத்தையடுத்து சவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு விரைந்து பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளார்.

**வெற்றிடங்கள்**

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வேலை ஸ்தலத்தில் கூலி ஆட்களும், சற்றறிங் அடிக்க அனுபவம் உள்ளவர்களும் உடனடியாகத் தேவை நேரில் வரவும்.

**சமக்கோன் லிமிட்டெட்.**

(A- 227)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர் மலையக தமிழர்"

## விசாரணையில் சாட்சியம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பருதாலை வீதியில் கோட்டைப் பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞர் ஒரு மலையகத் தமிழர் என்பது நேற்று முன்தினம்நடந்த மரணவிசாரணையில் செரியவந்துள்ளது.

அளவத்துகொடையைச் சேர்ந்த வெங்கடாசலம் பத்மநாதனின் (27 வயது) மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவில் நடைபெற்றது. யாழ். நீதவான் எஸ், நாகராசா மரண விசாரணையை நடத்தினுர்.

ஜேசு தேவதாஸ் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது;

''நானும் பத்மநாதனும் பிரதான வீதியிலுள்ள பேக்கரி முன் விருந்தையில் இருந்தபோது நகரில் துப்பாக்கி சூட்டுச்சத்தம் கேட்டது. என்ன நடக்கிறதென்று இருவரும் எட்டிப்பார்த்தோம். என் அருகில் ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. அச்சமயம் ''அண்ணே எனக்குச்சூடுபட்டு விட்டது'' என்று கூறியபடி பத்மநாதன் விருந்தையில் இருந்து விட்டார். அவரை வானில் ஏற்றி 6 மணியளவில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனேம். டாக்டர் பரிசோதனை செய்த பின்னர் அவர் இறந்துவிட்டாக கூறினுர். இந்தச் சூடு கோட்டை பக்கமாக இருந்து வந்தது.''

பேக்கரி உரிமையாளர் சுரேஸ் கிறிஸ்தோபர் சாட்சியமளிக்கையில் இறந்தவர் மலைநாட்டைச் சேர்ந்தவரென்றும் 5 வருடமாக பேக்கரியில் பணியாற்றி வருகிறுரென்றும், பெற்றேருருக்கு அறிவித்திருப்பதாகவும் கூறினுர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட நீதவான் இம்மாதம் 26ம்தேதி காலை யாழ். நீதிமன்றத்தில் விசாரணை தொடர்ந்து நடைபெறுமென்றும் சம்பவம் பற்றி தெரிந்தவர்கள் சாட்சியமளிக்க வரலாமென்றும் தெரிவித்தார். (க)

# 'மரியாயின் சேனை' பொன்விழா

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் 'மரியாயின் சேனை' நிறுவப்பட்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவுக்கு நன்றி கூறுமுகமாகவும், மரியாயின் சேனையின் பொன்விழாவைக் கொண்டாடும் முகமாகவும் யாழ் மரியன்னை பேராலயத்தில் இன்று சனிக்கிழமை காலை9 மணிக்கு ஆயர், ஆன்ம இயக்குநர் கூட்டுத்திருப்பலி நடைபெறும்.

# ''ஜனநாயகத்துக்கு விரோதமானது''

(யாழ்ப்பாணம்)

''போர்விமானக் குண்டு வீச்சு முறையற்றது. ஜனநாயகத்திற்கு விரோதமானது. இதனை உடனே நிறுத்த நடவடிக்கை வேண்டும்''.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு யாழ் பொதுசன விவகாரசபை செயலாளர் திரு.எஸ்.பொன்னையா நேற்று முன்தினம் அனுப்பியுள்ள தந்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''யாழ்ப்பாணப் பகுதியில் நடந்த ஆகாயத் தாக்குதலில் அப்பாவிப்பொதுமக்கள் மடிந்துள்ளனர், மக்கள் உடைமை படும்ம்க்கள் மீது குண்டுகளை கள்சேதமடைந்துள்ளது. அடிப் பாவிக்கக்கூடாது. இதனை படை உரிமைகளுக்காக பாடு உடன் நிறுத்தவேண்டும்'', (க)

# பாராட்டு விழா நடத்துவர்

[புலோலி]

திரு. கே. நடனசபாபதியின் அரை நூற்றுண்டு வருடப்பூர்த்தியை முன்னிட்டு அவரது சமூகசேவைகளைப் பாராட்டுமுகமாக இலங்கை விஞ்ஞான அறிவியல் பரப்பு (கனிஷ்ட)யாழ் குழு, இலங்கை சைவ மன்றம், பருததித்துறை லயன்ஸ் கழக முன்னுள் உறுப்பினர்கள், பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றம் ஆகியன இணைந்து ஞானசம்பந்தர் கலை மன்ற மண்டபத்தில் இம்மாதம் 24 ம் திகதி நடைபெறவுள்ள இப்பாராட்டு விழாவுக்கு முன்னுள் பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமை தாங்குவார்.

யாழ், ஆயர் பேரருட்திரு வ. தியோகுப்பிள்ளை அவர்கள் இவ்விழாவுகளுக்குத் தலைமை தாங்குவார். (ஐ)


Post and Telegraph Retired Employees Benefit Society

அஞ்சல் தொலை தொடர்பு இளைப்பாறிய சேவையாளர் நலன்புரிக் கழகம்

மேற்படி கழகத்தின்
அங்குரார்ப்பணப் பொதுக்கூட்டம்
1986-02-24 (திங்கட்கிழமை) காலை 10மணிக்கு
யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கலை மன்றத்தில்
நடைபெறும்.

இளைப்பாறியவர்கள் யாவரும் வரவழைக்கப்படுகின்றனர்.

ஏ. சி. கந்தசாமி,
இடைக்காலத் தலைவர்.

1986-02-20. (C 884)



வெளிநாட்டுப் பயணங்கள்

மீண்டும் வழமைபோல்

ஜேர்மனி, பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, மெக்சிக்கோ

ஆகிய நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்

உடனே பிரயாணம் செய்யத்தக்கதாக எல்லா வசதிகளும் ஒழுங்குகளும் செய்து தருவோம்.

MACK TRAVELS

8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 24791 Residence; 24414

(A268)



இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்




ரூபா 2/-




ரூபா 12/50

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறெரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ சோப்

இனும்: (1) ஒவ்வொரு புதிய பார் சோப்புடனும் ஓர் பொக்கற் கலண்டர்.
(2) 5 எம்டீ சோப் மேலுறைகளுக்கு ஓர் பொக்கற் கலண்டர்.
(3) 30 எம்டீ சோப் அல்லது 5 பார்சோப் உறைகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.

14, 16, கைத்தொழிற்பேட்டை — அச்சுவேலி.



விக்னு டியூசன் சென்றர்

52,ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.

வடமாகாணத்தில் கலை,வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்

★

இறுதி மீட்டல் வினு விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன

86 A/L

சனி, ஞாயிறு : காலை 8.00 மணி
Day Classes : காலை 8.00மணி

எமது வழமையான தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:

பொருளியல் - திரு. கிருஷ்ணனந்தன்
வர்த்தகம் - திரு. இலங்கா
கணக்கியல் - திரு வன்னியசிங்கம்
அளவையியல் - திரு. சுப்பிரமணியம்
தமிழ் - திரு. குழந்தைவேல்
புவியியல் - திரு. குணராஜா
இந்து நாகரிகம்- திரு. சர்மா
அரசியல் - திரு. மஃறூப்

மு. குறிப்பு: குறிப்பிட்ட திகதியின் மீட்டல் வகுப்புகளுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. 88-ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்பு பங்குனி 1ம் திகதிக்குப்பின் ஆரம்பமாகும்.

(A226)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி மேறி திரவியம் விஸ்வலிங்கம் என்பவரின் மரணசாதனம் விடயத்தில்

மரணமெய்தியவர்

வைத்திய கலாநிதி பிலிப் குணசிங்கம் விஸ்வலிங்கம் ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 224

எதிராக

கிறிஷான்று பிஞேஜன் விஸ்வலிங்கம் ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி, தற்போது கிறிஸ்தவ மருத்துவக்கல்லூரி, வேலூர், தென் இந்தியா

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ம் திகதி தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை 1984-ம் ஆண்டு ஆவணி மாதம் 9-ம் திகதி பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 19-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986-ம் ஆண்டு மாசி மாதம் 20-ம் திகதியாகிய இன்று நீதிமன்றக் கட்டளைப்படி

**ஆ. குணநாயகம்,**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்.
சாவகச்சேரி.

தயாரித்தவர்
**எஸ். கே. திரவியநாயகம்**
மனுதாரின் சட்டத்தரணி.

C 887

## தொழிற்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கான திட்டங்கள் செய்யப்பட்டு வருவதால், இம்மாதம் 27 ம் திகதி கூட்டுக் குழுவினர். எடுக்கவிருந்த நடவடிக்கை பின் போடப்படலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் கூட்டுக்குழுவினர் மற்றும் அமைப்புக்களின் ஆதரவுடன் நடத்திய ஊர்வலத்திலும், பார்க்க இருமடங்கு எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் எனத்தொழிற் சங்கங்கள் வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

அநேகமாக மார்ச்மாதம் நடுப்பகுதியில் இந்த எதிர்ப்பு தினம் இடம்பெறும் எனக் கூறப்படுகிறது. [க]

## இன்றைய பலன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

வருகை மகிழ்ச்சியைத் தரும். வரவேற்கவேண்டிய தினம்.

**துலாம்:** மாணவர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம், கல்வித் துறையிலும் முன்னேற்றமுண்டு. சகோதர வழி ஆதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம் பெறும். சிலருக்குப் புதிய வாகனத்தில் முதலீடு செய்யும் சந்தர்ப்பம் கிடைக்கலாம் தாய்வழிச் சுகமும் உண்டு.

தனுசு; நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தெய்வத்தின் அருளும் உண்டு. புத்திரவழியாலும் சிறப்புண்டு.

மகரம்: எக் காரியத்திலும் அதிக கவனம் செலுத்துவது விரும்பத்தக்கது. உதவிசெய்யப்போய் குறைகேட்க நேரிடும். உடல் நலத்தைப் பேணவும்.

கும்பம்: குடும்ப வாழ்க்கை இன்று சுகமாக இருக்கும். தூரத்து உறவினர்ஒருவர் உங்களுடன் ஒத்துழைக்க முன் வருவார்.

மீனம்: முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை தோன்றும். சிலர் கடன்படவும் நேரும். நண்பரால் நஷ்டத்திற்கிடமுண்டு.

திருநெல்வேலி
வே. [illegible]திரன்

## நீதிச்சேவை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும் சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

வடபகுதியில் [illegible]நல் முறையாக நடந்த போர் விமானங்களின் குண்டு தாக்குதலினால், அப்பாவி சிறுவர்களும், வயோதிபரும் பலியாகியுள்ளதாகவும், பெண்கள் உட்பட அப்பாவி மக்கள் காயமடைந்திருப்பதாகவும், பல வீடுகள் சேதமடைந்திருப்பதாகவும், உடனடியாக விமானத்தாக்குதலை நிறுத்த வேண்டுமென்றும், 1000 மீற்றர் பாதுகாப்பு சட்டத்தையும், இராணுவ முகாம்களையும் வாபஸ் பெறவேண்டும் என்ற தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. (க)

## கீரிமலை நகுலேஸ்வரர் நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை நகுலேஸ்வரர் மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 10ந்திகதி வரை நடைபெறும்.

பங்குனி 8ம் திகதி தேர் உற்சவமும், 9ம் [illegible] உற்சவமும் நடைபெறும்.

## காயங்களுடன் சடலம்

[கிளிநொச்சி]

உருத்திரபுரம் கூளாவாடிச் சந்தியில் சுமார் 40 வயது மதிக்சத்தக்க ஆணின் சடலம் ஒன்று சிறு காயங்களுடன் 19 ம் திகதி கிடக்கக் காணப்பட்டது.

சின்னராசா எனப்படும் மூன்று பிள்ளைகளின் தந்தையெனவும், 10 ம் வாய்க்கால் வாசி என்றும் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ள போதும் மரணத்திற்கான காரணம் என்னவென்றும் இது எவ்வாறு சம்பவித்ததெனவும் தெரியவரவில்லை.

இம்மரணம் தொடர்பாக இப்பகுதி கிராமசேவையாளர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளார்.


# THE OPEN UNIVERSITY OF SRI LANKA

# VACANCIES

The Open University of Sri Lanka entertains applications from suitably qualified persons for the undermentioned posts.

1. Professor of Mathematics
   Salary Scale: Rs. 3625-9X100-4525 p.m.
2. Professor of Management Studies
   Salary Scale: Rs. 3625-9X100-4525 p.m.
3. Senior Lecturers in Botany, Mathematics, Zoology, Textile Technology, Law, Education, English and Management Studies
   Salary Scale: Rs. 2775-8X75-3375 p.m.
4. Lecturers in Botany, Mathematics, Zoology, Textile Technology
   Salary Scale: Rs. 2325-5X75-2700 p.m.
5. Assistant Lecturers in Botany, Mathematics, Zoology, Textile Technology, Law, Education, English and Management Studies
   Salary Scale: Rs. 1700-6X50-2000 p.m.
6. Training Engineer Grade II
   Salary Scale: Rs. 1650-12X50; 5X75-2625 p.m.
7. Workshop Engineer Grade III (Mechanical)
   Salary Scale: Rs. 1650-12X50; 5X75-2625 p.m.
8. Temporary Research Assistant (in any field of Engineering)
   Salary Rs. 1700 p.m.
9. Educational Assistants Grade I in Civil Engineering, Chemistry, Botany, Physics, Zoology, Law, Education, English and Management Studies
   Salary Scale: Rs. 1650-12X50; 5X75-2625 p.m.
10. Engineering Teaching Assistants Grade II in Mechanical Engineering
    Salary Scale: Rs. 1650-12X50; 5X75-2625 p.m.
11. Educational Assistants Grade II in Civil Engineering. Chemistry, Botany, Zoology, Law, Education, English and Management Studies
    Salary Scale: Rs. 1210-6X30-1390 p.m.
12. Director-Regional Educational Services
    Salary Scale: Rs. 3300-3X75; 2X100-4525 p.m.
13. Assistant Directors-Regional Educational Services (for services in and around Colombo/Kandy/Jaffna/Matara Regional and Study Centres.)
    Salary Scale: Rs. 2325-14X75-3375 p.m.
14. Data Processing Manager
    Salary Scale: Rs. 3150-5X75; 2X100-3725 p.m
15. Copy Editors
    Salary Scale: Rs. 1650-12X50; 5X75-2625 p.m.
16. Statistical Officer
    Salary Scale: Rs. 1210-6X30-1390 p.m.

In addition to salary, allowances related to Cost of Living Index approved by the University Grants Commission will be paid.

FRINGE BENEFITS

Holders of posts of Professor, Senior Lecturer and Lecturer will be eligible for one year's sabbatcial leave, with full pay on completion of 07 years' service. Those proceeding abroad on sabbatical leave will be eligible to receive passage for himself and his spouse,

Teachers with Engineering qualification will be paid an additional allowance of 20% of their salary.

AGE LIMITS

Age limit for posts 8, 12, 13 and 14 is 45 years and for posts 6, 10, 11, 15 and 16 is 40 years and for posts 7 and 9 is 35 years.

Those above the maximum age limit may apply and to be considered for contract appointment in the absence of other eligible applicants.

Applications will close on 14th March, 1986. Further particulars and applications forms are obtainable from the office of the Senior Assistant Registrar/Establishments upto 05th March. 1986 Applications by post are obtainable by sending a self-addressed stamped envelope 22.5c.m.x10c.m. in size to the above named.

REGISTRAR,
THE OPEN UNIVERSITY,
NAWALA,
NUGEGODA.
13-02-86.

(A 272)



## காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனம்

## பகிரங்க ஏல விற்பனை

## 24 – 02 – 1986

காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனத்தில் 24-02-1986 திங்கட்கிழமை காலை 10 மணி முதல் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

1. பழுதடைந்த ஒரு 31 ஸ்ரீ ஆஸ்ரின் கேம்பிறிச் கார்
2. ஒரு போட் வான்
3. கழிக்கப்பட்ட ரயர்கள், ரியூப்புகள், றிம்கள், வில்லுத்தகடுகள், உதிரிப்பாகங்கள், பஸ் ஆசனங்கள்
4. புதிய உதிரிப்பாகங்கள், வில்லுத்தகடுகள், உட்பட (லேலன்ட் - இசுசூ - பென்ஸ்) மற்றும் பல பொருட்கள்.

ஏல விற்பனைக்குரிய பொருட்களை கீழ் குறிப்பிட்ட விலாசத்தில் 1986-ம் ஆண்டு மாசி மாதம் 23-ந் திகதி காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை பார்வையிடலாம். கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் 26-02-1986 மாலை 4-00 மணிக்கு முன்னர் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

பிரவேசக் கட்டணம் ரூபா 50/–

நா. தியாகராசா,
பொது முகாமையாளர்,

**காங்கேசன் ரவல்ஸ் ஸ்தாபனம்,**
122, பிரதான வீதி, காங்கேசன்துறை.

(A275)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# போர் விமானத் தாக்குதலை எதிர்த்து யாழ். நகரில் 27-ம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

[யாழ்ப்பாணம்]

போர் விமானக்குண்டு தாக்குதலை நிறுத்துமாறு கோரியும், இராணுவ முகாம்களை வாபஸ்பெறுமாறு கோரியும் இம்மாதம் 27 ம் திகதி யாழ் நகரில் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்துவதென 15 அமைப்புகளை கொண்ட வெகுஜனபோராட்ட கூட்டுக்குழு நேற்று முடிவுசெய்துள்ளது.

யாழ்.நகர அண்ணா தி மு க காரியாலயத்தில், அமைப்பு குழு தலைவர் தா. க. துரைராஜசிங்கம் தலைமையில் நடந்த கூட்டத்தில், ஊர்வல ஏற்பாடுகள் பற்றி இறுதிமுடிவு செய்யப்பட்டது.

27 ம் திகதி காலை 9 மணிக்கு 20 ஊர்திகளுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம், யாழ் சிவன் கோவிலடியிலிருந்து புறப்பட்டு நகரவீதிகள் வழியாக கச்சேரி சென்று பின் நல்லூர் கந்தசுவாமி கோவிலை சென்றடையும் என முடிவுசெய்யப்பார்கள்.

அன்றைய தினம் கல்லூரிக்கு வரும் மாணவர்கள் காலை 10 மணிக்கு கல்லூரிகளை பகிஷ்கரித்து, ஊர்வலத்தில் பங்குபற்றுமாறு, நாளை கூட்டுக்குழுவினர் கல்லூரிகளுக்கு நேரில் சென்று வேண்டுகோள் விடுப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள், கடையடைப்பு செய்வதென்றும், பஸ்கள் வழக்கம்போல் சேவையில் ஈடுபடுமென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. [க]

## மின் தாக்கி இளைஞர் பலி!

(சாவகச்சேரி)

வீதிக்கருகில் செல்லும் மின்சார வயரில் இருந்து தமது வீட்டுக்கு மின்சார இணைப்பினை ஏற்படுத்த முயன்ற சமயம் நுணுவில் மேற்கைச் சேர்ந்த த. அருட்சோதி (வயது 23) எனும் இளைஞர் மின்சாரம் தாக்கி மரணமானார்.

## பல்கலைக்கழக ஊழியர் வெளிநடப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழகத்தில் முன்னறிவித்தலின்றி அடிக்கடி மறியல் போராட்டம் நடைபெறுவதை ஆட்சேபித்து பல்கலைக் கழக ஊழியர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.

இதுசம்பந்தமாக பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் நேற்று ஒன்றுகூடி அறிக்கை ஒன்றைத்தயாரித்து உபவேந்தரிடம் கையளித்தனர்.

முன்னறிவித்தலின்றி கதவடைப்பு ஏற்படுமிடத்து ஊழியர்கள் வேலைக்குச் சமூகமளிக்கமுடியாத நிலையிலிருக்கின்றனர்.

யாழ். பல்கலைக் கழக ஊழியர்கள் கடந்த ஒருமாத காலமாகப் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் கடமையாற்றிவிட்டு, தங்களது சம்பளத்தை நேற்றுப் பெறுவதற்கு ஆவலோடு சென்ற பொழுது, மாணவர்களது கதவடைப்புக் காரணமாகப்பெற முடியாதநிலையில் மிகுந்த கவலையுடனும், ஏமாற்றத்துடனும் வீடுதிரும்ப நேரிட்டதாக அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

## "அவர்கள் ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள்!" சிற்றுறு தாக்குதல் பற்றி 'ஈரோஸ்' அறிக்கை

[யாழ்ப்பாணம்]

திருகோணமலைப் பகுதியில் அல்லை-கந்தளாய் வீதியில் அமைந்துள்ள சிற்றுறு கிராமத்தில் தமது அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினரும் 50க்கும் அதிகமான ஆயுதப் பயிற்சி பெற்ற நபர்களும் ஸ்தலத்திலேயே உயிரிழந்ததாகவும், அவர்களிடமிருந்து வேட்டைத் துப்பாக்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டதாகவும் 'ஈழப் புரட்சி அமைப்பு' (ஈரோஸ்) உரிமைகோரி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

''செருவாவிலுள்ள ஊர்காவற்படை பயிற்சி முகாமில் ஆறு வார கால ஆயுதப் பயிற்சியைப் பெற்றிருந்த இவர்கள் சிற்றுறை அண்டிய பகுதிகளில் குடியமர்த்தப்படுவதற்கு இராணுவப் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்ட போதே இத் தாக்குதல் நடந்தேறியது. இவர்களில் பெரும்பாலானவர்கள் 20-30 வயதுடையவர்களாவர்.

இவர்களை குடியமர்த்தமுனைந்த பகுதிகளில் நீண்ட காலமாகவே தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்திருந்தனர். கடந்த ஆண்டு 'போர் நிறுத்தம்' நிலவிய காலங்களில் இப்பகுதிக்குள் பல தடவைகள் இராணுவமும் ஆயுதப் பயிற்சி முடித்த சிங்கள நபர்களும் புகுந்து பொது மக்களைச் சுட்டுக் கொன்றும் பெண்களை மானபங்கப்படுத்தியும் தீவைத்தும் அட்டூழியம்புரிந்திருந்தனர். இதனால் அவ்விடங்களிலிருந்து தமிழ் மக்கள் அகதிகளாக வெளியேற வேண்டியதாயிற்று வெறிச்சோடிக் கிடந்தஇந்நிலங்களில் ஆயுதபாணிகளான சிங்களவரைக் குடியமர்த்த எடுத்த முயற்சியை முறியடிக்கவே இவ்வதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வருடத்தில் திருகோணமலை, கல்குடா, முல்லைத்தீவு வவனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இத்தகைய ஆயுதந் தரித்த சிங்கள நபர்களை 'பொது மக்கள்' என்ற போர்வையில் குடியமர்த்த அரசு திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

''மேற்படிபகுதிகளில் திட்டமிட்டு குடியமர்த்தப்படவிருக்கும் சிங்களவர் ஆயுதப்பயிற்சியை பெற்றவராயும், ஆயுதங்களை தம்வசம் வைத்திருப்பவராயுமே இருப்பார்கள் என பாதுகாப்பு அமைச்சர் ஏற்கனவே பல தடவைகள் அறிவித்திருந்தார். ஆதலினல் இத்தகைய குடியேற்றக்காரர்களை நாம் பொதுமக்களாகவோ, அப்பாவிகளாகவோ கருதமுடியாது'' [மா]

## ஆனையிறவில் லொறி, சாரதி மீது தாக்குதல்

(கிளிநொச்சி)

மரமேற்றிச் சென்ற லொறி ஒன்று ஆனையிறவு இராணுவ முகாம் முன்பாக இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுலொறியும், சாரதியும் இரும்புக் கேடரால் தாக்கப்பட்டதாக தெரிகிறது.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சாரதி தெய்வாதீனமாக உயிர் தப்பினர். லொறி நிறைய முதிரைமரங்கள் இருந்ததாகவும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இந்த மரங்கள் கொண்டுசெல்லப்பட்டதாகவும்அப்போதேஇராணுவம் லொறியையும் மரத்தையும் கைப்பற்றியதாகவும் அறிவிக்கப்படுகிறது

## லலித் அறிவிப்பு

(கொழும்பு)

கடத்தப்பட்ட பிரிட்டிஷ் பிரஜையான திருமதி விலலிஸ் வைக்கப்பட்டிருந்த முகாம் பாதுகாப்புப் படைகளினல் அழிக்கப்பட்டு விட்டது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் உரையாற்றிய அவர் இத் தாக்குதலில் எட்டு ஈரோஸ் இயக்கத்தினரும், வேறு ஆறுபேரும் சொல்லப்பட்டுள்ளதாக கூறினர்.

## நேற்றும் கடையடைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை வெளியூர்களிலிருந்து யாழ். நகரை நோக்கி பஸ்களில் வந்த ஏராளமான மக்கள் நகரில் கடைகள் பூட்டப்பட்டிருந்தால் உடனடியாகவே வந்த வாகனங்களில்ஏறிச்சென்றனர்

யாழ்நகரில் உள்ள பாடசாலைகள் நடைபெற்றபோதிலும் மாணவர்கள் வரவு குறைவாகவே காணப்பட்டது.

[illegible] வாகக் காணப்பட்டது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka un er number B 1043/81 Ee ana u P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

# மரண அறிவித்தல்

## திருமதி குணலிங்கம் அருமைநாயகி (இராசாத்தி)



இவர் திரு. குணலிங்கம் (MODED-ஓமான்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி குணரஞ்சினி, திரு. குணதாசன் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இளையதம்பி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, மாணிக்கவாசகர் (நைஜீரியா), இராசேந்திரம், மகேந்திரன் (ஸ்ரான்லி கோப்பரேசன்) ஆகியோரின் சகோதரியும், செல்வராசா, ஜெயராம், திவ்வியம், சரோஜினி, திருமதி நேசமணி சிவானந்தம், சத்தியலெட்சுமி, தியாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், இளங்கோ (ஷப்ரு) அவர்களின் மாமியும், கணநாத்தின் பேத்தியும் ஆவார். அன்னாரது பூதவுடல் 23-2-86 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

நா. குணலிங்கம்.

219 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

C 904

## ஆறுமுகம் தர்மலிங்கம்

கோண்டாவில் நெட்டிலிப்பாய் திரு. தர்மலிங்கம் வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் கனகம்மாவின் அன்புக்கணவரும், தர்மராசா (மாவட்டத் தொழில் கந்தோர், யாழ்ப்பாணம்), கனகராசா(மாத்தளை அரசினர் வைத்தியசாலை), புஷ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும். சகுந்தலாதேவி, ஜெயஸ்ரீ. கைலைநாதன் (பெருந்தெருக்கள் திணைக்களம் புத்தளம்/ திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்: பூதவுடல் சனிக்கிழமை (22-02-86) பிற்பகல் 3மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக, காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

C 903 தகவல் கொடுப்பவர்: த. தர்மராசா

## அல்வின் தேவசகாயம்

பிரபல சங்கீத வித்துவான் அல்வீன் தேவசகாயம் அவர்கள் (இளைப்பாறிய சங்கீத ஆசிரியர்) 21-02-1986 இல் அமரத்துவம் அடைந்துவிட்டார்கள். இவர் திருமதி பூமணி அவர்களின் அன்புக்கணவரும், அமலதாஸ் (ஜேர்மனி), தேவி, மரியற்ரு, ஆம்ஸ்ரோங், ஜெசிற்ரு, ஞானசூரியம், சுகந்தா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 22-02-86 சனிக்கிழமை பி.ப 3-30 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலைக்கு 1, ஈச்சமோட்டை கடற்கரை வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும். (C 898)

## திருமதி அமிர்தரத்தினம் பாலசுந்தரம்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி அமிர்தரத்தினம் பாலசுந்தரம் (ஆச்சி) காலமானார். இவர் திரு. தம்பையா பாலசுந்தரம் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்] அவர்களின் அன்பு மனைவியும, சந்திரமோகன், இந்திரமோகன் [Sharjah], பாலமோகன் [Saudi Arabia,] ராஜமோகன் [Sharjah], திருமதி செல்வி சந்திரகாந்தன் ஆகியோரின் அருமைத் தாயாரும், திரு. வே. சந்திரகாந்தன் [மக்கள் வங்கி திருகோணமலை], திருமதி ராஜேஸ்வரி இந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார் இறுதிக்கிரியைகள் அன்னரது இல்லத்தில் சனிக்கிழமை 22-02-86) காலை 10 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தகவல்: பா. சந்திரமோகன், செல்விஸ்தான், உரும்பராய் கிழக்கு. [C 880]

## திருமதி மேரி மாகிறெற் கிளினெற் பீற்றர்

திருமதி மேரி மாகிறெற் கிளினெற் பீற்றர் காலமானார். இவர் Dr. J. N. பீற்றரின் அன்பு மனைவியும், நாளினி [லண்டன்], லியோ (கனடா), லிலனி, நிருனி ஆகியோரின் தாயாரும், S. சுந்தரராஜனின் மாமியாரும், கரம்பனைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி சூசைப்பிள்ளையின் மகளும், மாதகலைச் சேர்ந்த திரு. திருமதி S பீற்றரின் மருமகளும், S E. ரூஜரட்ணம், திருமதி சாளற் பஸ்ரியன், காலஞ்சென்ற B S. றிச்சேட், S. B. டேவிட் ஆகியோரின் சகோதரியும், செபஸ்ரியன் ஜெபமணி, அலோய், கை [Guy], காலஞ்சென்ற ஜெயமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னரின் பூதவுடல் 140, பிரதான வீதி, யாழ்ப்பாண இல்லத்தில் இருந்து 23-02-1986 காலை 9-00 மணிக்கு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

C 905 J, N. பீற்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org